1993 ஏப்ரல் 23]

(ஆ) ஓர் உறுப்பினர் பேசியதை இன்னோர் உறுப்பினர் பேசியதாக ஒரு பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து.

*திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பற்றி, அவர்களுடைய வெற்றிக்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் காரணம், அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய செல்வாக்கில் வெற்றி பெற்று விட்டு சட்டமன்றத்திற்கு வராமல் இருக்கிறார்கள் என்று சொல்லி, அவர்களை அவர்களுடைய தொகுதியிலே கொண்டு விடுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று ஒரு வேண்டுகோளை நான் வைத்து இருந்தேன். இன்றைக்கு தினத்தந்தி பத்திரிகையிலே திரு. வி. கே. சின்னசாமி அவர்கள் கூறியதாக அந்தச் செய்தி வந்திருக்கிறது. (சிரிப்பு) ஒருவேளை என்னுடைய வேண்டுகோளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்று அதைச் செய்திருந்தால் அந்தப் புகழ் திரு. வி. கே. சின்னசாமி அவர்களுக்குப் போய் விடுமே என்பதை நான் வேதனையோடு குறிப்பிட்டு, இதுபோன்று இனி மேலும் பத்திரிகைகள் ஆள் மாறாட்டம் செய்யக்கூடாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்... (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வேறு ஒன்றும் இல்லை. திரு. வி. கே. சின்னசாமியும் இருக்கிறார். திரு. ம. சின்னசாமியும் இருக்கிறீர்கள். திரு. வி. கே. சின்னசாமி அடிக்கடி எழுந்து நின்று கொண்டே இருக்கிற காரணத்தாலே அவர் கண்ணிலே பட்டிருப்பார். எனவே, அது தவறுதான். அதைத் திருத்திக்கொள்வார்கள்.

முற்பகல் 11–30

*திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாருக்கு புகழ் வந்தாலும் அது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் காலடிக்குத்தான் போய்ச் சேரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

3. கவன ஈர்ப்பு

(அ) ஆரணியிலிருந்து பெங்களூருக்கு இயங்கிக் கொண்டிருந்த பட்டுக்கோட்டை அழகிரி பேருந்து நிறுத்தப்பட்டதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. டாக்டர் **ஜெய்சன் ஜேக்கப் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம்**